செ.வெ.எண்:16/2017 நாள்:06.09.2017

## சிவகங்கை மாவட்டம்

## சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வேளாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.



சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பந்தல் காய்கறி சாகுபடியை ஆய்வு செய்தார். உடன் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வேளாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில், ஒ.புதூர் ஊராட்சியிலுள்ள அண்ணாநகர் பகுதியில் மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை மூலம் நடைபெற்று வரும் இரண்டு ஊரணிகள் தூர்வாரும் பணியினை ஆய்வு செய்து, பருவமழை தொடங்கும் காலம் நெருங்குவதால் பணிகளை விரைவில் முடித்திடவும், ஊரணிப் பகுதிகளில் தண்ணீர் வரும் வரத்துப் பாதைகளை சுத்தம் செய்து நல்லமுறையில் மழை நீரை சேமிப்பதற்கு விரைந்து பணிகளை செயல்படுத்திடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஒக்கூரைச் சேர்ந்த கணபதி சுப்பிரமணி என்ற விவசாயின் நிலத்தில் தேசிய வேளாண்மை திட்டம் மற்றும் நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் 4.2 ஏக்கர் நிலப்பரப்பளவில் நீடித்த நிலையான கரும்புச் சாகுபடித் திட்டம் மற்றும் சொட்டு நீர் அமைத்து நடைபெற்று வரும் கரும்பு விவசாயப் பகுதியினை ஆய்வு செய்து வறட்சி நிலவுகின்ற சூழ்நிலையில் நீர் மேலாண்மை திட்டத்தின் சிறப்புக்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய அறிவுறுத்தினார்.

மேலும், இடையமேலூரைச் சேர்ந்த கருப்பணன் என்ற விவசாயி தேசிய வேளாண்மை வளர்ச்சித் இயக்கத் திட்டத்தின் கீழ் பந்தல் காய்கறி சாகுபடி மூலம் 0.20 ஹெக்டேர் பரப்பளவில் நடைபெற்று வரும் விவசாயப் பணியினையும், வேளாண்மைத் துறையின் மூலம் நீடித்த நிலையான வேளாண் இயக்கத் திட்டத்தின் கீழ் மண்புழு உரம் தயாரிக்கும் கூடத்தினையும் ஆய்வு செய்தார்.

கூட்டுறவுப்பட்டி ஊரைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி என்ற விவசாயி தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் பப்பாளி வீரிய ஒட்டு பழக்கன்று சாகுபடி 2 ஹெக்டேர் பரப்பளவில் 50 சதவிகிதம் மானியத்தில் பழக்கன்று நடும் பணியினையும், 75 சதவிகிதம் மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி அமைத்ததையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) (பொ) திரு.தனபாலன், வேளாண்மைத் துணை இயக்குநர் திரு.கண்ணன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் திரு.அழகுமலை, வேளாண்மை அலுவலர்கள் திருமதி.பவுசியாராணி, திருமதி.சத்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.